அன்பு சகோதரிகளுக்கு!

இம்மாதம் நாம் கயிற்றுத் தையலை உபயோகித்து டெய்ஸி பூவினை அலங்கரிக்க கற்றுக் கொள்வோம்,

**தேவையான பொருட்கள்**

1, தேவையான அளவு துணி
2, ஆங்கர் கை எம்பிராய்ட்ரி நூல்கள்
3, 6-ம் நம்பர் ஊசி
4, எம்பிராய்ட்ரி ரிங் (ஃப்ரேம்)

இத்தையல் பார்ப்பதற்குத் தடிமனாகவும், காம்பு, இலை, பூ ஆகியவற்றைக் கெட்டியாகவும் உருண்டையாகவும் தெரியும்படி தைக்க உபயோகப்படுகின்றது.

6-ம் நம்பர் ஊசியில் மூன்று இழை நூலைக் கோர்த்து இரு துணியையும் சேர்த்து சிறு முடி போடவும்.

# எம்பிராய்டரி

## கயிற்றுத் தையல்

## (Rope Stitch)

16

படம் 1-ல் காட்டியுள்ளது போன்று இலக்கம் ஒன்றில் ஊசியைக் கீழிருந்து துணியின் மேற்பாகத்திற்குக் கொண்டு வரவும். இலக்கம் 1-க்குப் பக்கத்திலேயே சிறிது தள்ளி இலக்கம் 2-ல் துணியில் கீழ் நோக்கிக் குத்தி மீண்டும் இலக்கம் 3-ல் ஊசியை மேலே எடுக்கவும். இலக்கம் 1-ல் உள்ள நூலை ஊசிக்கு மேலே கொண்டு வந்து ஊசிக்கு அடியில் கொடுத்து எடுக்கவும். இப்போது லூப்புடன் சேர்ந்த குறுக்குத் தையல் போன்று இருக்கும் (Loop with Cross Stich).



கு. தேவகுமாரி

இத்தையலுக்குப் பக்கத்திலேயே இரண்டாவது இலக்கம் 4-ல் குத்தி மீண்டும் தையலுக்கு முன்பு சிறிது தள்ளிக் குத்தி இலக்கம் 5-ல் ஊசியை எடுக்கவும். இதே போன்று தொடர்ந்து தைக்கவும். இத்தையல் பார்ப்பதற்கு கயிறு முறுக்கியது போன்று (படம் 3-ல் உள்ளது போல) இருக்கும்.

என்ன சகோதரிகளே! இத்தையல் கற்றுக்கொள்ள இலகுவாக உள்ளதா? மீண்டும் அடுத்த இதழில் புதியதொரு தையலுடன் சந்திப்போம், நன்றி.










